வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க-.எண் 4213/அ2/2023 நாள் 11.10.2023

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் – பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் அனைத்து அரசு / நகரவை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் – மின் கட்டண நிலுவைத் தொகையினை உடனடியாக செலுத்த . அறிவுறுத்துதல் - தொடர்பாக |
| பார்வை | 1. தமிழ்நாடு, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 59896/பி1/இ1/2023 நாள் 05.10.2023<br>2. பள்ளிக்கல்வி இயக்கக, நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 020205/பி1/இ1/2023 நாள் 23.04.2023<br>3. சென்னை-2 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இணை நிர்வாக இயக்குநர் / நிதி அவர்களின் கடித எண் CFC/REV/SO/LBAEE/LB/F.SG/Dept/D.251/2023, நாள் 03.10.2023 |

பார்வை –2 ல் காணும் செயல்முறைகளில், 2023-2024 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு நிதி ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்பட்டதில், 2202 02 101 AA, 2202 02 109 AA மற்றும் 2202 02 109 AB ஆகிய ஊதிய கணக்குத் தலைப்புகளில் 305 அலுவலகச் செலவுகள் 03 மின் கட்டணங்கள் என்ற உப கணக்குத் தலைப்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு ( பள்ளிகளுக்கு உட்பட ) பகிர்ந்தளிக்கும் பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பார்வை 1 ல் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3 ல் காணும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இணை நிர்வாக இயக்குநர் / நிதி அவர்களின் 03.10.2023 நாளிட்ட கடிதத்தில் ( கடித நகல் மற்றும் இணைப்பு இணைக்கப்பட்டுள்ளது ) பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள அலுவலகங்கள் / பள்ளிகளில் உள்ள மின் கட்டண தொகை ரூ.29.95 கோடி மாதக் கணக்கில் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 04.10.2023 அன்றைய நிலவரப்படி Excel Sheet மூலமாக மின் கணக்கீட்டு எண்ணுடன் ( Service connection Number ) எவ்வளவு தொகை நிலுவை என்ற விவரங்கள் பார்வை 3 ல் காணும் கடிதத்தின் வாயிலாக பெற்று அதன் விவரங்களுடன் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. எனவே பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள வேலூர் மாவட்டத்தை சார்ந்த அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ளதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு , அதற்குண்டான மின் கட்டண நிலுவைத் தொகையினை இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்ற 13.10.2023 2 தினங்களுக்குள் தமிழ்நாடு மின் உற்பத்தி

மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் அறிவிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் பொருத்தமட்டில் மின் கட்டணத் தொகை ஏதும் இல்லை என்ற சான்று வேலூர் மாவட்டக்கல்வி அலுவலகம் ( இடைநிலை ) லும், தொடக்கப் பள்ளிகள் சார்ந்து மாவட்டக் கல்வி அலுவலகம் ( தொடக்க கல்வி ) பெற்றும், தொகுத்து தங்கள் அளுகைக்கு கீழ் உள்ள பள்ளிகளின் விவரங்கள் மேற்காண் தேதிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும். மேலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படும் பட்சத்தில் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள் அதற்குரிய கருத்துருவினை மாவட்டக் கல்வி அலுவலகம் ( இடைநிலை) சமர்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் மின் கட்டணம் நிலுவை குறித்தான விவரங்கள் அவ்வபோது ஆய்வு மேற்கொண்டு மாவட்டக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்வதோடு , தனிகவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு மின் கட்டணம் நிலுவை இருப்பது தெரியவரின் சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தலைமைஆசிரியர்களுக்கு திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் கடிதம் அனுப்பி வைக்க மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

மின் கட்டண நிலுவை விவரம் Excel Sheet

//ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

1. மாவட்டக்கல்வி அலுவலர்கள்
   இடைநிலை / தொடக்கக் கல்வி
   வேலூர் மாவட்டம் தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.
2. அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்
   வேலூர் மாவட்டம்.

நகல்

1. சென்னை-6 பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. சென்னை-6 பள்ளிக் கல்வி நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.